CHEPAUK, CHENNAI 28 SEP 2010

## சுருக்கம்

கேளிக்கை வரி இழப்பீட்டு நிதி – நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் – தமிழில் பெயர் சூட்டப்பட்டுள்ள திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி விலக்களித்தல் – ஈடு செய்யும் மான்யம் ஒதுக்கீடு செய்தல் – பகிர்ந்தளிக்க குழு அமைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை

அரசாணை (நிலை) எண்: 217 நாள் :28 .09.2010

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.75, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 1.6.2007.
2. அரசாணை (நிலை) எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.8.2008.
3. அரசாணை (நிலை) எண்.243, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11.12.2009.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித ந.க.எண். 44478/ தி3/ 2010–1, நாள் 21.09.2010.

----

ஆணை:

மேலே படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.11.2006 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையை ஆய்வு செய்த போது "தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்க தமிழக அரசு எடுத்த முடிவால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் இழப்பை அரசு ஈடுசெய்யும்" என்ற அறிவிப்பை வெளியிட்டிருந்தார்கள்.

2. கேளிக்கை வரி ஈடு செய் இழப்பீட்டு நிதியின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்களை தேர்வு செய்து, ஒப்புதல் அளிக்க இதுவரை குழு எதுவும் அமைக்கப்படாததால் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கும் குழு ஒன்றை அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களைத் தலைவராகக் கொண்டு கீழ்க்கண்டவாறு அமைக்கலாம் என்றும், இத்திட்டத்தின் கீழ் உரிய முன்மொழிவுகளை அந்தந்த துறைத் தலைவர்கள் குழுவிற்கு சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று பணியினை செயல்படுத்தலாம் என தெரிவித்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியிருந்தார்.

| | | |
|---|---|---|
| 1 | அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9. | தலைவர் |
| 2 | மாநகராட்சி ஆணையர், சென்னை. | உறுப்பினர் |
| 3 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை. | உறுப்பினர் |
| 4 | பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை | உறுப்பினர் |

3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில் கேளிக்கை வரி ஈடு செய் இழப்பீட்டு நிதியின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்களை தேர்வு செய்து, ஒப்புதல் அளிக்க மேலே பத்தி 2–ல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களைக் கொண்டு குழு ஒன்றை அமைத்து அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108.
தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம், சென்னை– 35.
உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநர், சென்னை–108.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9.
இ.கோ/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்